මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/60/16/අධිසේවක පදනම මත උසස්වීම් ලබා දීම

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2022.07.

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,

**<u>இலக்கம் அவி/12/1101/530/35 மற்றும் 08.08.2012ஆம் திகதியிட்ட தீர்மானத்தின்படி, இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2இன் தரம் II இற்கும் மற்றும் வகுப்பு 3 இற்கும் மிகை ஊழியர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இலக்கம் அவி/21/1824/308/139 மற்றும் 2021.11.23ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி, மிகை ஊழியர் சேவை அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கல்</u>**

இலக்கம் அவி/12/1101/530/35 மற்றும் 08.08.2012ஆம் திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய 08.08.2012ஆம் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II மற்றும் வகுப்பு 3 இற்கு மிகை ஊழியர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இலக்கம் அவி/21/1824/308/139 மற்றும் 23.11.2021ஆம் திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி மற்றும் அது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரினது கடித இலக்கம் PSC/EST/02-05/01/2020 மற்றும் 2022.06.02ஆம் திகதியிட்ட கடிதத்தில் இருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின்படி மிகை ஊழியர் சேவை அடிப்படையில் முறையே தரம் I மற்றும் II இற்கு பதவி உயர்வு பெற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **மிகை ஊழியர் சேவை அடிப்படையில் பதவி உயர்வுக்கு பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்**

அ) பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் மிகை ஊழியர் சேவை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெறுவார்கள்.

(i) மிகை ஊழியர் சேவை அடிப்படையில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் (தேவையான ஆவணங்கள் இணைப்பு 01 இன் படி)

(ii) பதவி உயர்த்துவதற்கு தகைமை பெறும் திகதியில் சேவையின் தரம் II இல் குறைந்தபட்சம் 06 ஆண்டுகள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல் மற்றும் 06 வேதன ஏற்றங்களை பெற்றிருக்க வேண்டும்.

(iii) உரிய திகதியில் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். (இதுவரை வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேர்ச்சி பெறாத உத்தியோகத்தர்களுக்கு 26.05.2022ஆம் திகதி முதல் மூன்று ஆண்டுகள் சலுகைக்கால அவகாசம் வழங்கப்படும்.)

(iv) மற்றைய அரசகரும மொழியில் சித்தி அல்லது விலக்கு பெற்றிருத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீட்டு நடைமுறையின்படி பதவி உயர்வு திகதிக்கு முந்தைய ஆறு (06) ஆண்டுகளில் திருப்திகரமான அல்லது அதற்கு மேலான செயற்சாதனையை வெளிப்படுத்தியிருத்தல்

(vi) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 01/2020இன் படி ஒழுக்காற்று நடவடிக்கை தண்டனை பெற்றுக் கொண்டிராதிருத்தல்

ஆ). பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் இலங்கை அதிபர் சேவையில் தரம் II இற்கு மிகை ஊழியர் சேவை அடிப்படையில பதவி உயர்வு பெறுவார்கள்.

(i) மிகை ஊழியர் சேவை அடிப்படையில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல். (தேவையான ஆவணங்கள் இணைப்பு 01 இன் படி)

(ii) பதவி உயர்த்துவற்கு தகைமை பெறும் திகதியில் சேவையின் 3 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 06 ஆண்டுகள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல் மற்றும் 06 வேதன ஏற்றங்களை பெற்றிருக்க வேண்டும்.

(iii) உரிய திகதியில் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். (இதுவரை வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேர்ச்சி பெறாத உத்தியோகத்தர்களுக்கு 26.05.2022ஆம் திகதி முதல் மூன்று ஆண்டுகள் சலுகைக்கால அவகாசம் வழங்கப்படும்.)

(iv) மற்றைய அரசகரும மொழியில் சித்தி அல்லது விலக்கு பெற்றிருத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீட்டு நடைமுறையின்படி பதவி உயர்வு திகதிக்கு முந்தைய ஆறு (06) ஆண்டுகளில் திருப்திகரமான அல்லது அதற்கு மேலான செயற்சாதனையை வெளிப்படுத்தியிருத்தல்

(vi) அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020இன் படி ஒழுக்காற்று நடவடிக்கை தண்டனை பெற்றுக் கொண்டிராதிருத்தல்.

03. மேலும் இவ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை, எடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரினது இலக்கம் PSC/EST/02-05/01/2020 மற்றும் 02.06.2022ஆம் திகதியிட்ட கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(i) சலுகைக் காலம் முடிவதற்கு முன்னரே ஓய்வு பெறும் உத்தியோகத்தர்கள், பதவி உயர்வு தொடர்பான பிற தகுதிகளைப் பூர்த்தி செய்திருந்தால், அத்தகைய உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் திகதிக்கு முந்தைய தேதியிலிருந்து பதவி உயர்வு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) இந்த உத்தியோகத்தர்கள் மிகை ஊழியர் சேவை அடிப்படையில் வழங்கப்பட்ட அதிபர் பதவிகளில் இருந்து ஓய்வு பெற வேண்டும்.

(iii) மிகை ஊழியர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர், அத்தகைய மற்றோர் உத்தியோகத்தருடன் ஒத்துமாறல் இடமாற்றம் பெற வாய்ப்பளிக்கப்படலாம்.

(iv) அதிபர் சேவை உத்தியோகத்தர்களால் விண்ணப்பித்த வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கு எந்த அடிப்படையிலும் மிகை ஊழியர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள இந்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படக்கூடாது.

04. அ). மேலே உள்ள பந்திகள் 2.(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த மிகை ஊழியர் சேவை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இத்துடன் காணப்படும் மாதிரிப் படிவத்துக்குக்கு அமைய (இணைப்பு 02) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வலய கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விச் செயலாளரின் பரிந்துரைகள் சகிதத்துடன்,

ஆ). மேலே உள்ள பந்திகள் 2(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த மிகை ஊழியர் சேவை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின வகுப்பு 3 இற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இத்துடன் காணப்படும் மாதிரிப் படிவத்துக்குக்கு அமைய (இணைப்பு 03) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வலய கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்வி செயலாளரின் பரிந்துரைகள் சகிதத்துடன்,

**"உதவிச் செயலாளர், அதிபர் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல"** என்ற முகவரிக்கு அனுப்புமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

05 மேலும், மாகாணத்தில் பணிபுரியும் மிகை ஊழியர்களின் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2இன் தரம் II மற்றும் வகுப்பு 3 இற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை குறித்து அறியத்தருவதோடு உரிய விண்ணப்பம் மற்றும் பதவியுயர்வு மாதிரிப் படிவத்தை www.moe.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம்.என். ரணசிங்க**

செயலாளர்

கல்வி அமைச்சு.

பிரதி:

01. மாகாணக் கல்விப் பணிப்பாளர், ........................... மாகாணம் - தயவுடன் அனைத்து வலய அலுவலகங்களுக்கும் தெரிவிப்பதற்காகவும் மற்றும் அறிதற்பொருட்டும்